Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 084 | செவ்வாய்க்கிழமை Tuesday | 23.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## சென்னை தலைமைச் செயலகத்தில்

# முதலமைச்சர் விஜய்யுடன் அமெரிக்க தூதர் சந்திப்பு



தமிழக முதல்-அமைச்சர் ஜோசப் விஜய்யை சென்னை தலைமைச் செயலகத்தில், இந்தியாவுக்கான அமெரிக்க நாட்டு தூதரும், தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான சிறப்பு தூதருமான செர்ஜியோ கோர் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், பொதுத்துறை முதன்மை செயலாளர் ரீட்டா ஹரீஷ் தக்கர், சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதர் மரியானா எல்.நெய்ஷலர், சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரிவின் தலைவர் பிரையன் இ.ஸ்மைஸர், புதுடெல்லியில் உள்ள அமெரிக்க தூதர் அலுவலகத்தின் தலைமை அலுவலர் லிசா ஒய். பிரவுன், தூதரின் சிறப்பு உதவியாளர் சார்லஸ் வில்லியம் ஹார்டன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

### முதலமைச்சர் விஜய்க்கு பிறந்த நாள் வாழ்த்து

தமிழக முதல்வர் விஜய்யின் 52-வது பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு பிரதமர் நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். அதேபோல் தமிழகத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் ,பாமக தலைவர் அன்புமணி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தமிழக முதல்வரும், தவெக தலைவருமான விஜய், தனது 52-வது பிறந்தநாளை (ஜூன் 22) கொண்டாடுகிறார். முதல்வராக பொறுப்பேற்ற பிறகு வரும் முதல் பிறந்தநாள் என்பதால், தமிழகம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாட தவெக தொண்டர்கள் திட்டமிட்டு, பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இந்நிலையில், முதல்வர் விஜய்க்கு சமூக வலைதள பதிவு மூலம் பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். "தமிழக முதல்வர் விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்துகள். அவரது நீண்ட ஆயுளுக்கும், ஆரோக்கியத்துக்கும் பிரார்த்திக்கி றேன்" என அதில் பிரதமர் மோடி குறிப்பிட்டு ள்ளார்.

சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் முதல்வர் விஜய்க்கு வாழ்த்து தெரிவித்தனர். பிறந்தநாள் வாழ்த்துரை உடன் அவை நிகழ்வை சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் தொடங்கி வைத்தார்.

திமுக தலைவர் ஸ்டாலின், "முதல்வர் ஜோசப் விஜய்க்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகள்! தாங்கள் மகிழ்ச்சியோடும், உடல் - உள நலத்தோடும் பொதுவாழ்வில் பணியாற்றிட விழைகிறேன்" எனதனது சமூக வலைதள பதிவில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, "இந்த இனிய பிறந்தநாள் ஆண்டுதோறும் வெற்றிகரமாகவும், மகிழ்ச்சிகரமாகவும் கொண்டாடப்பட்டு, நீங்கள் எடுக்கின்ற அரசியல் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறவும், எதிர்ப்புக்கள் தவிடு பொடியாகவும், தமிழ் நாட்டினுடைய மேன்மைக்காவும், உயர்வுக்காகவும், வழிகாட்டும் நல்லாட்சி நீங்கள் நடத்திடவும், முழுமையான உடல் நலனோடும், மன நிறைவோடும் பன்னூறு பிறை கண்டு வாழவும் இயற்கைத் தாயின் அருளைப் பிரார்த்திக்கிறேன்" என்று முதல்வர் விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார். பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், "தமிழக வெற்றிக் கழகத் தலைவரும், முதல்வருமான விஜயின் 52-ஆம் பிறந்தநாளில், அவருக்கு எனது உளமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல உடல் நலத்துடன் நூறாண்டு வாழ்ந்து, பொதுவாழ்க்கையில் மக்களுக்கு பணியாற்ற வாழ்த்துகிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

# "மின்வெட்டு பிரச்சனையால் தொழில் முதலீடுகளை கோட்டை விடாதீர்கள்" சட்டப்பேரவையில் உதயநிதி அறிவுரை



சென்னை: "மின்வெட்டு பிரச்சனையால் தொழில் முதலீடுகளை கோட்டைவிட்டு விடாதீர்கள். தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அறிவிக்கப்படாத மின்வெட்டு நிலவுகிறது. சிறுகுறு தொழில்கள் மின்வெட்டால்முடங்கியுள்ளது.

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அறிவிக்கப்படாத மின்வெட்டு நிலவுகிறது. முன்பெல்லாம் புயல் மழைக்குத்தான் பள்ளிகளுக்கு விடுமுறை விடுவார்கள். ஆனால் இந்த ஆட்சியில்தான் மின்சாரம் இல்லை என்று விடுமுறை விடுகிறார்கள்.

மின்வெட்டுப் பிரச்சினையை தீர்க்க அரசின் நடவடிக்கை என்ன என்று முதல்வர் பதில் சொல்ல வேண்டும்." என்று சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி பேசினார்.

### ஆளுநர் மகிழ்ச்சிதான் முக்கியமா?

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசுகையில், "ஆளுநர் உரையின்போதுதமிழ்த்தாய் வாழ்த்து ஒருமுறை பாடப்பட்டது. ஆனால், தேசிய கீதம் இருமுறை பாடப்பட்டது. இதுவரை கடைபிடிக்கப்பட்ட மரபை மீறி தேசிய கீதம் இருமுறை பாடப்பட்டது. சட்டப்பேரவையில் தமிழ்த்தாய் வாழ்த்து ஒருமுறைமற்றும்தேசிய கீதம் ஒருமுறை பாடுவது தான் வழக்கம். ஆனால், தேசிய கீதம் மட்டும் ஏன் 2 முறை பாடப்பட்டது. இதே கோரிக்கையை இதற்கு முன்பு இருந்த ஆளுநர் எங்கள் ஆட்சிகாலத்திலும் வைத்தார். ஆனால், எங்கள் முதல்வர் உறுதியாக இருந்து இந்த அவையின் இறையாண்மையை காத்தார்.

பதவியேற்பு விழா ஆளுநர் மாளிகையில் நடந்தது. அதனால் அங்கே வந்தே மாதரம், தேசிய கீதம்,தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. ஆனால், சட்டப்பேரவை நமது ஆளுகைக்குள் உள்ளது. நமது ஆளுகையில் உள்ள சட்டப்பேரவையை ஏன் ஆளுநர் வசம் ஒப்படைத்தீர்கள். என்ன சமரசம் நடந்தது. ஏன் தேசிய கீதம் இருமுறை பாடப்பட்டது. அப்படியானால் தமிழ்த்தாய் வாழ்த்தையும் இருமுறை பாடச் சொல்லி நீங்கள் ஆளுநரிடம் கோரிக்கை வைத்திருக்கலாம்.

தவெக உறுப்பினர்கள் பேசும்போது, "ஆளுநர் முன் தமிழ்த்தாய் வாழ்த்து பாடிவிட்டோம்; ஆளுநர் மகிழ்ச்சியாக இருந்தார்" என மகிழ்ச்சியை தெரிவிக்கிறார்கள். தவெகவினருக்கு தமிழ்த்தாய் வாழ்த்தை விட ஆளுநர் மகிழ்ச்சியாக இருந்தது தான் முக்கியம் போல தோன்றுகிறது. உங்களுக்கு ஆளுநர் முக்கியமா? தமிழ்த்தாய் வாழ்த்து முக்கியமா?" என்றார்.

உதயநிதியின் உரையை இடைமறித்த சபாநாயகர் ஜேசிடி பிரபாகர், "தமிழ்த்தாய் வாழ்த்து தான் முதலில் பாடப்பட வேண்டும் என்ற நமது அனைவரின் நோக்கத்தின் படியே தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட்டிருக்கிறது.அதேபோல,தேசிய கீதம் 2 முறை பாடப்பட்டத்தில் என்ன தவறு இருக்கிறது?" எனக் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து பேசிய உதயநிதி, மின்வெட்டு பிரச்சினையால்தொழில் முதலீடுகளை கோட்டைவிட்டு விடாதீர்கள். மின் துறை அமைச்சர் இரண்டுநாட்கள்பொறுமையாக இருங்கள் என்கிறார். அப்படியானால் அடுத்த இரு நாட்கள் மின்சாரம் இருக்குமா என்ற கேள்வி எழுகிறது. தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அறிவிக்கப்படாத மின்வெட்டு நிலவுகிறது. முன்பெல்லாம் புயல் மழைக்குத்தான் பள்ளிகளுக்கு விடுமுறை விடுவார்கள். ஆனால் இந்த ஆட்சியில்தான் மின்சாரம் இல்லை என்று விடுமுறை விடுகிறார்கள்.

விசிக தலைமை அலுவலகத்துக்கு முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப. சிதம்பரம் சென்றபோது மின்சாரம் இல்லாததால், ஒரு மணி நேரம் மின்சாரம் இல்லாமலே திருமாவளவனுடன் பேசிக்கொண்டிருந்திருக்கிறார். பவர் ஷேரிங் கொடுத்த கட்சிக்கு, இப்போது தமிழகத்துக்கு பவர் கொடுக்க முடியவில்லை.

இரு நாட்கள் முன்பும் ஆளும் கட்சி தவெக அலுவலகத்திலேயே மின் வெட்டு ஏற்பட்டிருக்கிறது. ஆளுங்கட்சியா இருந்தும் பனையூரிலேயே பவர் இல்லையே?" என அங்கு வந்தவர்கள் புலம்பிவிட்டுப் போனதாகதகவல் வந்துள்ளது. தமிழ்நாடு இப்போது இருளில் மூழ்கியுள்ளது. சிறுகுறு தொழில்கள் மின் வெட்டால் முடங்கியுள்ளது.

மின்வெட்டால் மோட்டார் பம்பு செட்டுகள் இயக்கமுடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்போது மின்வெட்டுக்கும் திமுகதான் காரணம் என்கிறார்கள். எங்கள் ஆட்சியில் ஏற்படாத மின்வெட்டு, இப்போது ஏற்படக் காரணம் நிர்வாகதிறமையின்மையா? அல்லது தொழில்நுட்ப பிரச்சினை உள்ளதா. அதனை தீர்க்க அரசின் நடவடிக்கை என்ன என்று முதல்வர் பதில் சொல்ல வேண்டும்." என்றார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

## தமிழகம் முழுவதும்
# 14 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்



சென்னை:

தமிழகம் முழுவதும் 14 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மதுரை,திருப்பூர்,சேலத்துக்கு புதிய காவல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இது குறித்து உள்துறை செயலர் கே.மணிவாசன் பிறப்பித்த உத்தரவு: தமிழக மின்வாரிய விஜிலென்ஸ் அதிகாரியாக இருந்த ஆயுஷ் மணி திவாரி இப்போது தலைமையிடத்து கூடுதல் டிஜிபி-யாக நியமிக்கப்பட்டுள்ளார். திருப்பூர் காவல் ஆணையராக இருந்த எஸ். ராஜேந்திரன் இப்போது மதுரை காவல் ஆணையராகவும், அங்கு காவல் ஆணையராக இருந்த கபில்குமார் சரத்கர் இப்போது வட சென்னை கூடுதல் ஆணையராகவும்,அப்பதவியில்இருந்த பிரவேஷ் குமார் இப்போது கடலோர பாதுகாப்பு குழும ஐஜி-யாகவும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு ஐஜி-யாக உள்ள எஸ். ராஜேஸ்வரி இப்போது திருப்பூர் காவல் ஆணையராகவும், சேலம் காவல் ஆணையராக இருந்த அனில் குமார் கிரி இப்போது சிலை கடத்தல் தடுப்பு பிரிவு ஐஜி-யாகவும், சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையராக இருந்த ஜி.கார்த்திகேயன் இப்போது சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஐஜி-யாகவும், அப்பதவியில் இருந்த பி. சாமுண்டீஸ்வரி இப்போது சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையராகவும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

காவல் துறை நவீனமயமாக்கல் பிரிவு ஐஜி ஏ.ஜி.பாபு இப்போது டிஜிபி அலுவலகத்தில் செயல்படும் தலைமையிடத்து ஐஜியாகவும், சென்னை காவல் தலைமையிடத்து ஐஜி ஜோஷி நிர்மல் குமார் இப்போது சேலம் காவல் ஆணையராகவும், பணியமைப்பு பிரிவு ஐஜி பி.சி தேன்மொழி இப்போது சென்னை மத்திய குற்றப்பிரிவு கூடுதல் காவல் ஆணையராகவும்,அப்பதவியில்இருந்த ராதிகா இப்போது நிர்வாகப் பிரிவு ஐஜியாகவும், அங்கிருந்த சி. மகேஸ்வரி இப்போது லஞ்ச ஒழிப்புத்துறை (செல்-1) ஐஜியாகவும், அப்பதவியில் இருந்த துரைகுமார் இப்போது பணியமைப்பு ஐஜியாகவும் நியமிக்கப்ப ட்டுள்ளனர்.


**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்


Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## கோவையில் 5 மற்றும் 6வது அனைத்து இன நாய் சாம்பியன்ஷிப் கண்காட்சி

# கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள ஹிந்துஸ்தான் கல்லூரி வளாகத்தில் நடத்தி சாதனை படைத்துள்ளது கோவை மான்செஸ்டர் கென்னல் கிளப்

கோவை மான்செஸ்டர் கென்னல்கிளப்,திகென்னல் கிளப் ஆஃப் இந்தியா அமைப்போடு இணைக்கப்பட்ட கோவை மான்செஸ்டர் கென்னல் கிளப் விலங்கின ஆர்வலர்கள் மிகவும் எதிர்பார்த்த,தனது 5



மற்றும்6-வது அனைத்து இன நாய் சாம்பியன்ஷிப் கண்காட்சியை கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள ஹிந்துஸ்தான் கல்லூரி வளாகத்தில் நடத்தியது. இந்த பிரம்மாண்ட நிகழ்வுக்காக நாடு முழுவதிலும் உள்ள நாய் பிரியர்கள், நாய் வளர்ப்பாளர்கள் கலந்து கொண்டனர்..

நிகழ்வின் சிறப்பம்சங்களாக நடுவர் குழு,

நாய் இனங்களின் தனித்துவத்தை பறைசாற்றும் விதமாக நடைபெற்ற அமைந்த இந்த சாம்பியன்ஷிப் போட்டியில், 11 போட்டிப் பிரிவுகளின் கீழ் 50-க்கும் மேற்பட்ட நாய் வகைகளைச் சேர்ந்த 400-க்கும் அதிகமான நாய்கள் பங்கேற்றது அவற்றை கணக்கீட்டு அவைகளைக்கு மதிப்பெண்கள் வழங்கி பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கினார். இதனூ, நாய் இனத்தின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளைத்தீர்மானிக்கும் சர்வதேச தரநிலைகளின் அடிப்படையில், இந்தியாவின் புகழ்பெற்ற தேசிய நடுவர்களான ஷரத் சர்மா, பிரீதம் மற்றும் ரஞ்சித், மற்றும் முன்ஜால் ஆகியோர் அடங்கிய உயர்மட்ட நடுவர் குழு இந்த நாய் வகைகளை மதிப்பீடு செய்தது.

இந்த நிகழ்வில் டெல்லி, கல்கத்தா, பூனா, மேற்கு வங்கம், கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளா உள்ளிட்ட நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் சிறந்த நாய் வளர்ப்பாளர்கள் மற்றும் நாய்கள் கலந்து கொண்டன. பிரம்மாண்ட கிரேட் டேன் நேர்த்தியான டாபர்மேன், ஜெர்மன் ஷெப்பர்ட்,மற்றும் மக்களின் மனதைக் கவர்ந்த கோல்டன் மற்றும் லேப்ரடார் ரெட்ரீவர்ஸ் போன்ற உலகளாவிய நாய் இனங்களுடன், சிறிய ரக நாய்களான டச்ஷண்ட் மற்றும் பக் ஆகியவை பார்வையாளர்களைக் கவர்ந்தது. மேலும்,நமது மண்ணின் பெருமையானகொம்பை, கன்னி, சிப்பிப்பாறை, ராஜபாளையம் போன்ற நாட்டு நாய் இனங்களின் அணிவகுப்பு இந்த கண்காட்சியின் மிக முக்கிய சிறப்பம்சமாக அமைந்தது.

கோவை மான்செஸ்டர் கென்னல்கிளப்தலைவர் தனு ராய் மற்றும் செயலாளர் சரவணகுமார் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த கண்காட்சி, செல்லப்பிராணி வளர்ப்பை ஊக்குவித்தல், நாய் இனங்களின் தூய்மையைக் கொண்டாடுதல் மற்றும் நாய் ஆர்வலர்கள் தங்களுக்குள் தொடர்புகொள்வதற்கான ஒரு தளத்தை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களை எட்டியது. கோவை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த நாய் பிரியர்கள், மற்றும் செல்லப்பிராணிகளை வளர்க்க விரும்பும் ஏராளமான பொதுமக்கள் இந்த நாய் அழகுக் கண்காட்சியைத் திரளாக வந்து கண்டு ரசித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆதிதிராவிடர் நலத்துறை சமூக நீதித்துறை என பெயர் மாற்றத்திற்கு புரட்சி பாரதம் கட்சி தலைவர் ஜெகன் மூர்த்தி கண்டனம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் உள்ளதனியார்திருமண மண்டபத்தில் புரட்சி பாரதம் கட்சி சார்பில் மாநில செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது இதில் அக்கட்சித் தலைவர் ஜெகன் மூர்த்தி கலந்து கொண்டு பின் செய்தியாளர்களை சந்தித்தார் இதில் தமிழகத்தில் சமூகநீதி நிலை நிறுத்தப்பட்டுள்ளதாஎதற்குஆதிதிராவிடர் நலத் துறையை சமூகநீதி நலத்துறைஎன பெயர் மாற்றம் செய்யப்பட்டது இதற்கு கண்டனம் தெரிவித்தார் மேலும் தமிழகத்தில் ஆணவ படுகொலை தொடர்ந்து நடைபெற்றுள்ளதாகவும் இதற்கு தனி சட்டம் இயற்ற வேண்டும் தொடர்ந்து தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு வருவதாகவும் இதனை முதல்வர் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்தமிழகஅரசை கண்டித்து சென்னையில் போராட்டம் நடத்தப்படும் எனவும் மேலும் தொடர்ந்து சட்ட ஒழுங்கு மீது நடவடிக்கை இல்லையென்றால் தொடர் போராட்டம் நடத்தப்படும் எனும் தெரிவித்தார் அதிமுக கூட்டணியில் நீடிப்பதா அல்லது வெளியேறுவதா என சென்னையில் நடைபெறும் கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார்.

# இன்ஸ்டாகிராம் காதலனை பார்க்க வீட்டைவிட்டு வெளியேறிய 15 வயது சிறுமி போலீசார் மீட்டனர்



நாமக்கல் மாவட்டம் ஜேடர்பாளையம் பகுதியில் 15 வயது சிறுமி தனது பெற்றோருடன் வசித்து வருகிறார். எஸ்.எஸ்.எல்.சி. படித்து சிறுமி தனது தந்தை செல்போனில் இன்ஸ்டாகிராம்கணக்கை பயன்படுத்தி வந்துள்ளார். அவருக்கு இன்ஸ்டாகிராம் மூலம் பெரம்பலூரில் உள்ள தனியார் தொழிற்சாலையில் வேலை பார்க்கும் கேரள மாநிலம் பாலக்காட்டை சேர்ந்த வாலிபருடன் பழக்கம் ஏற்பட்டது. இந்த பழக்கம் நாளடைவில் காதலாக மாறியது. இந்த நிலையில்,நேற்று முன்தினம் இன்ஸ்டாகிராம் காதலனை பார்க்க தனது தந்தையின் செல்போனை எடுத்துக் கொண்டு யாரிடமும் சொல்லாமல் வீட்டைவிட்டு வெளியேறிய சிறுமி திருச்செங்கோடு வந்துள்ளார். அங்கிருந்து பாலக்காட்டிற்கு எப்படி செல்வது என்று தெரியாமல் திணறிய சிறுமி, திருச்செங்கோடு அரசு மருத்துவமனை பிரசவ வார்டில் தஞ்சமடைந்தார்.

நள்ளிரவு வரை அங்கேயே இருந்ததால் சிறுமியின் நடவடிக்கையில் சந்தேகமடைந்து பணியில் இருந்து நர்சுகள் சிறுமியிடம் விசாரித்தனர். அப்போது சிறுமி முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்துள்ளார். இதுகுறித்து திருச்செ ங்கோடு டவுன் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார் சிறுமியிடம் கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். விசாரணையில், இன்ஸ்டாகிராம் காதலனை பார்க்க பெரம்பலூர் சென்றதும், வழி தெரியாததால் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் தஞ்சமடைந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து சிறுமிக்கு அறிவுரை வழங்கிய போலீசார் பெற்றோரை வரவழைத்து அவர்களிடம் சிறுமியை ஒப்படைத்தனர்.இந்த சம்பவம்திருச்செங்கோட்டில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



## தென்னிந்தியாவில் தங்களது கிளைகளை வலுப்படுத்தும் வகையில்

# ஹோம்ஸ் டு லைப் பர்னிச்சர் நிறுவனம் கோவையில் இரண்டாவது கிளையை கோவை திருச்சி சாலை, ஒண்டிப்புதூர் பகுதியில் அறிமுகம் செய்துள்ளது

ஹெச்டிஎல் குழு மத்தின் ஆதரவு பெற்ற, சிங்கப்பூரை தலைமையிடமாக கொண்ட உயர்தர பிரீமியம் ஃபர்னிச்சர் விற்பனை நிறுவனமான, ஹோம்ஸ் டு லைப் நிறுவனம் தென்னிந்தியாவில் தங்களது, கிளைகளை வலுப்படுத்தும் வகையில்கோவை ஒண்டிப்புதூர் பகுதியில் தங்களது, இரண்டாவது கிளையை துவங்கியது. வீடுகளை அழகு படுத்தும் மெத்தைகள், டைனிங் டேபிள்கள், சோபாகள், இங்கு உயர் ரக வகையில் காட்சிப்படுத்தியுள்ளது. இக்கிளையின் திறப்பு விழாவானது ஹோம்ஸ் ஜோன் நிறுவனத்தின் நிறுவனர் ராஜ் மாரியப்பனுடன் இணைந்து திறக்கபட்டுள்ளது. இதனை அவர் ரிப்பன் வெட்டியும் குத்துவிளக்கேற்றி வைத்தும்துவக்கிவைத்தார் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ராஜ் மாரியப்பன் கூறியதாவது..

50க்கும் மேற்பட்ட நாடுகளில் எங்களது நிறுவனம் பல்வேறு வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்துள்ளது. இந்த ஆண்டு தங்களது 50ம் ஆண்டு செயல்பாட்டு விழாவை கொண்டாடி வருகின்றது என்றார். சர்வதேச வடிவமைப்பு நிபுணத்துவம் மற்றும் துல்லியமான பொறியாளர்களின் கை வண்ணத்தில்உருவானஇவைகள்,உங்களதுவீடுகளின் அழகை வலுப்படுத்துவதுடன், நீடித்த தரத்தையும் வழங்குகின்றது என்றார்.

நாடு முழுவதும் 22 மாநிலங்களில், 35க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களை கொண்டுள்ள இந்த நிறுவனம் கோவையில் தங்களது இரண்டாவது கிளையை துவங்குவது எங்களுக்கு பெருமையளிக்கும் செயலாக உள்ளது என்றார். நேர்த்தியான வடிவமைப்புகளை மக்கள் அதிக அளவில் விரும்பிவருகின்றனர் இதன் காரணமாகவே முதல்கிளைதுவங்கபட்ட சில மாதங்களிலேயே இரண்டாம் கிளை துவக்க பட்டுள்ளது என்று தெரிவித்தார். இந்த செய்தியாளர்கள் சந்திப்பின் பொழுது ஹோம்ஸ் டுலைப் இந்தியா தலைவர் வருண் காந்த் உடனிருந்தார் என்பது குறிப்பிட த்தக்கது.

# பல்வேறு கிளப்புகளுக்கு இடையேயான லீக் போட்டி வெற்றியாளர்களுக்கு கோவை மாவட்ட டென்னிஸ் சங்கம் பரிசுகள் வழங்கி கவுரவிக்கும் நிகழ்ச்சி

## கோவை நவ இந்தியா பகுதியில் உள்ள இந்துஸ்தான் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது




கோவை மாவட்ட டென்னிஸ் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட 2026-ஆம் ஆண்டுக்கான பல்வேறு கிளப்புகளுக்கு இடையேயான லீக் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்ற அணிகள் மற்றும் வீரர்களுக்கு பரிசுகள் வழங்கும்விழா, கோவை நவ இந்தியாவில் உள்ள இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. கோவை மாவட்ட டென்னிஸ் சங்க முன்னாள் தலைவர் கே.ஜி. ரமேஷ் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

1977-ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க டேவிஸ்கோப்பைபோட்டியைத்தொடர்ந்து,1978-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டஇந்தகிளப்புகளுக்கு இடையேயான லீக் போட்டி, இந்த ஆண்டுடன் தொடர்ந்து 48-ஆவது ஆண்டை நிறைவு செய்துள்ளது. நாட்டிலேயே நீண்டகாலமாக நடைபெறும் மிகப்பெரிய மாவட்ட அளவிலான டென்னிஸ் லீக் போட்டிகளில் இதுவும் ஒன்றாக திகழ்கிறது. 2026-ஆம் ஆண்டுக்கான போட்டியில் 11 பிரிவுகளில் 116 அணிகள் பங்கேற்றதுடன், கோவை, திருப்பூர், பொள்ளாச்சி மற்றும் நீலகிரி பகுதிகளைச் சேர்ந்த 1,117 வீரர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான வீரர்கள் பங்கேற்கும் இந்தப் போட்டி, இப்பகுதியின் முக்கியமான டென்னிஸ் தொடர்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. விழாவில் பேசிய சங்கச்செயலர்எம்.சதீஷ் குமார்நாயர்,கடந்தஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக டென்னிஸ் விளையாட்டின் வளர்ச்சியில் சங்கம் முக்கிய பங்காற்றி வருவதாகக் குறிப்பிட்டார்.

விழாவிற்கு தலைமை வகித்த சங்கத் தலைவர் சீனிவாசன், கோவை மற்றும் சுற்றுவட்டார மாவட்டங்களில் டென்னிஸ் விளையாட்டை வளர்ப்பதில் சங்கம் முக்கிய பங்காற்றி வருவதாகவும்,அதன் முயற்சிகளால் கே.ஜி. ரமேஷ், நிருபமா வைத்தியநாதன், ஸ்ரீராம் பாலாஜி, ரஞ்சித் விராலி-முருகேசன் மற்றும் வளர்ந்து வரும் வீராங்கனை மாயா ராஜேஸ்வரன் ரேவதி உள்ளிட்ட பல்வேறு சிறந்த வீரர்கள் உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கடையம் சத்திரம் பாரதி மகளிர்பள்ளி யோகாவில் சாதனை; மாணவிக்கு பாராட்டு

யோகாமற்றும்ரோலர்ஸ்கேட்டிங்மூலம்பல்வேறு சாதனைகளை மேற்க் கொள்ளும் கடையம் சத்திரம் பாரதி மகளிர்ப் பள்ளி மாணவி சாதனைச்சுடர்



விருதுப் பெற்ற ஷாஜிதாவிற்கு அனைத்து ஆசிரியைகளும்,மாணவிகளும் பாராட்டு

.தென்காசி மாவட்டம் கடையம் அடுத்த இரவணசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த ஷாஜிதா ஜைனப் என்ற மாணவி கடையம் சத்திரம் பாரதி மகளிர் உயர்நிலைப் பள்ளியில் 8-ம் வகுப்பு பயின்று வருகிறார்.இவர்,யோகா மற்றும் ரோலர் ஸ்கேட்டிங்கில் பல போட்டிகள் மட்டுமின்றி இதன் மூலம் பல்வேறு சமூக விழிப்புணர்வு நிகழ்வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருகிறார்.மேலும், "சாதனைச் சுடர் ஸ்டார் பிக்ஸ்" எக்ஸ்லெண்ட் விருதுகளும் பெற்றுள்ளார்.

தொடர்ந்து "யூனிவர்செல்"மற்றும் "சாம்பியன்" உலகசாதனைபுத்தகங்களிலும்இடம்பிடித்தசாதனை மாணவி ஷாஜிதா ஜைனப்பை பள்ளியில் வைத்து தலைமையாசிரியைமற்றும்அனைத்துஆசிரியைகள், மாணவிகள்,அலுவலக பணியாளர்கள் போன்ற அனைவரும் பாராட்டினர்.இந்த சாதனை மாணவி ஷாஜிதா, பல்வேறு சமூக விழிப்புணர்வு பிரபலம்,"சிங்கப்பெண்"விருதுப் பெற்ற மிஸ்பா நூருல் ஹபிபாவின் உடன் பிறந்த சகோதரி ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலமைச்சர் விஜய்யின் 52வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# தூத்துக்குடி மத்திய மாவட்டம் மீனவர் அணி சார்பில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் 52 ஆவது பிறந்தநாள் விழா இன்று தமிழகம் முழுவதும் தமிழக வெற்றிக் கழகத்தினர் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர்.

தூத்துக்குடியில் தமிழக வெற்றிக் கழக தூத்துக்குடி மத்திய மாவட்டம் மீனவர் அணி அமைப்பாளர் செல்வம் தலைமையில் 46வது வார்டு பாத்திமாநகர் பகுதியில் மத்திய மாவட்ட செயலாளர் சாமுவேல்ராஜ் முன்னிலையில் தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் 52வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கேக் வெட்டி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

இந்தநிகழ்ச்சியில்தூத்துக்குடிமத்தியமாவட்ட கழக நிர்வாகி கிஷோர், தூத்துக்குடி மத்திய மாவட்ட கழக இணை செயலாளர் கோல்டன், தூத்துக்குடி மத்திய மாவட்ட கழக நிர்வாகி பெர்க்மான்ஸ், மீனவர் அணி ஜால்வின், ஜூடு, எடிசன், பிரதீபா, அகல்யா, செல்லத்தாய் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஓமலூர் அருகே உள்ள தொளசம்பட்டியில் முதலமைச்சர் விஜயின் பிறந்தநாளை முன்னிட்டு துப்புரவு பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே உள்ள தொளசம்பட்டியில் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52-வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழக வெற்றி கழகம் மற்றும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்குதல் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு சேலம் மேற்கு மாவட்ட பொறுப்பாளர் எம். ரத்னவேல் காமராஜர் அறக்கட்டளை தலைவர்,எம்.பி.எஸ். மணி மற்றும் ஏற்காடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.திருஞானம் ஆகியோர் தலைமை தாங்கினர். நிகழ்ச்சியில் தமிழகவெற்றி கழகநிர்வாகிகள் குணா, தங்கமணி,ராஜீவ் காந்தி,தீனதயாளன், புகழேந்தி, பிரபாகரன், அன்பரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சேலம் மாவட்ட காங்கிரஸ் செயலாளர் பி.ஏ. அருள், கலைச்செல்வன், கட்சி நிர்வாகிகள்,தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.விழாவின் நிறைவில் ஏழை, எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன்,துப்புரவு பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.



# திருப்போரூரில் முதலமைச்சர் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு உலக சாதனை யோகா நிகழ்ச்சி




தமிழ்நாடு முதலமைச்சர் விஜய், அவர்களின்52வதுபிறந்தநாளை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தைச் சேர்ந்தமுனைவர்சி.பிரதீப்ஏற்பாட்டில்செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் பகுதியில் உள்ள ஏவிஎம் ஸ்கூல் ஆஃப் குரூப்ஸ் திருப்போரூர் ஆறுபடை தனியார் பள்ளியில் 1000 மாணவர்கள் பங்கேற்கும், உலக சாதனையோகாநிகழ்ச்சி நடைபெற்றது,

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் விஜயராஜ், த.வெ.க செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் சி.வி.தீனா, தையூர் ஊராட்சி மன்ற தலைவர் குமரவேல், ஆகியவர்கள் குத்து விளக்கு ஏற்றி வைத்து விழாவை தொடங்கி வைத்தார்கள்,

இந்த நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக யோகா பயிற்சியாளர் முருகன், செயல்பட்டார்,

சட்டமன்ற உறுப்பினர் விஜயராஜ், பேசுகையில் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் நன்றாக படித்து தன்னம்பிக்கை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கினார், மேலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு கோப்பை மற்றும் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழும் மெடலும் வழங்கப்பட்டது,

சிறப்பு அழைப்பாளர்கள் அனைவருக்கும் பள்ளி செயலாளர் ஹரி பிரசாத், பள்ளி தீன் கவிதா பீட்டர், பள்ளி சீனியர் பிரின்ஸ்பல் கலைச்செல்வி,பிரின்ஸ்பல் உமா கல்யாணி மற்றும் கஜலட்சுமி ஆகியவர்கள் சால்வை அணிவித்து நினைவு பரிசு வழங்கினார்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் முன்னிலையில் பள்ளி மாணவர்கள் வித விதமாக யோகா சம்பந்தப்பட்ட சாகசங்கள் செய்து அனைவரது பாராட்டுகளை பெற்றார்கள்,

மேலும் இந்த நிகழ்ச்சியில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட த.வெ.க நிர்வாகிகள்,பள்ளிஆசிரியர்கள் என பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# மதுராந்தகம் அருகே இரும்பேடு ஊராட்சியில் முதலமைச்சர் விஜய்யின் 52வது பிறந்தநாள் விழா

## மாபெரும் இலவச கண் மருத்துவ முகாம்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இரும்பேடு அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக வெற்றிக் கழக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஆணைக்கிணங்க மாண்புமிகு தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இரும்பேடு அரசு மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட மகளிர் நிர்வாகி

சுமதி சாமிகண்ணு தலைமையில் தமிழக வெற்றி கழகம் மற்றும் ஸ்மாட் விஷன் கண் மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச கண் மருத்துவ முகாம் சிதம்பரம் டாக்டர் தேவி மற்றும் ஒருங்கிணைப்பாளர் மைதிலி கோபிநாத் குழுவினர்கள் மருத்துவ உதவியாளர்கள் கமல் , புஷ்பராஜ், ஜெயபிரகாஷ், அட்சிதா, செர்லின் மேரி, ஒருங்கிணைப்பில் நடைபெற்றது இமருத்துவ முகாமில் சுற்று வட்டார கிராமத்திலிருந்து பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு கண் புரை பரிசோதனை செய்து சிகிச்சை பெற்று சென்றனர் இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது


# மதுராந்தகத்தில் அதிமுக மாபெரும் பொதுக்கூட்டம்

## மாவட்ட செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ்.ஆறுமுகம் பங்கேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தேரடி தெருவில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட அதிமுக



சார்பில் தமிழக அரசு கண்டித்து கண்டன பொதுக்கூட்டம் அதிமுக சார்பில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழு க்குன்றம் எஸ் ஆறுமுகம் தலைமையில்நடைபெற்ற நிகழ்ச்சியில் மதுராந்தகம் அதிமுக நகர கழக செயலாளர் பூக்கடை கேசி சரவணன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாநிலஅவை உறுப்பினர் தனபால், செய்யூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் பெரும்பாக்கம் ராஜசேகர், கழக அமைப்பு செயலாளர் வாலாஜாபாத் கணேசன்,தலைமை பேச்சாளர் கல்யாணசுந்தரம், அமுதா அருணாசலம், அப்சரா ரெட்டி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கணிதா சம்பத், இவர்கள் கலந்து கொண்டு தமிழக வெற்றி கழக அரசின் அவலங்களை சிறப்புரையாற்றி னர் அப்போது தலைமைக் கழக பேச்சாளர் அமுதா அருணாச்சலம் பேசுகையில் தமிழகத்தில் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகளால் சிறு வயது முதல் முதியவர் வரை பாலியல் வன்கொடுமை செய்யப்படுகிறார்கள் இதுவரை அக்கட்சி தலைவர் ஜோசப் விஜய் இதுவரை ஒரு கண்டனம் கூட தெரிவிக்கவில்லை தமிழகத்தில் 5 முதல் 6 மணி நேரம் மின்வெட்டு நடைபெறுகிறது இது குறித்தும் அவர் எதுவும் பேசவில்லை என பேசினார் இந்தக் கூட்டத்தில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில்,சமூகநலன்மற்றும்மகளிர்உரிமைத்துறையின்சார்பில்“பெண்குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்” குறித்த விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை கையெழுத்திட்டு நேற்று (22.06.2026) துவக்கி வைத்தார். உடன் மாவட்ட சமூக நல அலுவலர் (பொ) பூங்கோதை உள்ளார்.



ஈரோடுமாவட்டவருவாய்அலுவலர்சு.சாந்தகுமார்மாவட்டஆட்சியர்அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகளை நேற்று (22.06.2026) கேட்டறிந்தார்.

# தென்காசி மாவட்டம் இலஞ்சி ஆர்.பி.மே. பள்ளியில் முதல்வரின் விஜய் பிறந்தநாள் ஓவிய விழா


தென்காசி மாவட்டம் இலஞ்சி இராமசுவாமி பிள்ளை மேல்நிலைப் பள்ளியில் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்தநாளை

ஆறுமுகம் தலைமை தாங்கினார் ,

உதவித்தலைமைஆசிரியர்கள் சித்திரை சபாபதி , சொர்ண சிதம்பரம், செல்லம்மாள் ஆகியோர் முன்னிலைவகித்-

செயலாளர் ஐ.சி. சண்முகவேலாயுதம்

பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் தேசிய நல்லாசிரியர் முத்தையா உள்ளிட்டோர் வாழ்த்தினார்கள்.



முன்னிட்டு ஆர்.பி ஓவியக் கழகத்தைச் சார்ந்த 52 மாணவர்கள் 52

திருஉருவங்களைபல்வேறு வண்ணங்களில் ஓவிய ஆசிரியர் கணேசன் வழிகாட்டுதலில் வரைந்து காட்சிப்படுத்தினார்கள்.

இந்நிகழ்விற்கு பள்ளித் தலைமையாசிரியர் தார்கள்.

என். சி. சி அலுவலர் செந்தில் பாபு வரவேற்றார். பள்ளி இறை வணக்கத்தின் போது பள்ளியில் படிக்கும் 1750 மாணவர்களும் வாழ்த்து கூறினார்கள்.

முதல்வரின் படம் வரைந்த மாணவர்களை ஆசிரியர் முருகேசன் அனைவருக்கும் பேனா பரிசளித்தார் . சாரணர் இயக்கம் கிருஷ்ணம்மாள் சுரேஷ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்

சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் சண்முக சுந்தரம் நன்றி கூறினார்.

## முதல்வர் விஜய்யின் 52வது பிறந்த நாளை முன்னிட்டு

# தென்காசியில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 200க்கும் மேற்பட்டோர் பயன் பெற்றனர்



தமிழக முதல்வரும் தமிழக வெற்றிக் கழக தலைவர் ஆன ஜோசப் விஜயின் 52 வது பிறந்தநாள் விழாவை, தமிழக வெற்றிகழகநிர்வாகிகள் இன்று தமிழக முழுவதும் மிகச் சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். தென்காசி கூளக்கடைபநார்அருகே மருத்துவ முகாம் நடைபெற்றது முகாமினை மாவட்ட நிர்வாகி சிவசீத்தாராம் தொடங்கி வைத்தார்.

முகாமில் கண் பரிசோதனை, பல் மருத்துவம், ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் கண்டறிதல் போன்றவை நடைபெற்றது. முகாமில் 200க்கும் மேற்பட்ட ஏழை எளிய பொது மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். முன்னதாக காசி விஸ்வநாதர் ஆலயத்தில் முதல்வர் விஜய் நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும் சிறப்பு பூஜை நடைபெற்றது அதனைத் தொடர்ந்து, புதிய பேருந்து நிலையத்தில் மக்களுக்கு அன்னதானம் மற்றும் , 52 ஆட்டோ ஓட்டுனர்களுகு சீருடை வழங்கப்பட்டது. மாலை கடையத் தெரு பள்ளிவாசலில் முதல்வர் விஜய்யின் பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு தொழுகை நடைபெற்றது

மேலும் நிகழ்ச்சிகளில் தவெக நிர்வாகிகள் காசிம்கான், இலஞ்சி மாரியப்பன், பாலா, சதீஷ்மார், ஹரி, அன்பு பாலா மற்றும் மருத்துவர்கள் செவிலியர்கள் எனபலர்கலந்துகொண்டனர்.

# கோவையில் ரிசலியோ தி பைன் கிளினிக் எனும் மருத்துவமனையில் திறப்பு விழா நிகழ்ச்சி

## நாள்பட்ட வலிகளுக்கு அறுவை சிகிச்சை என்று நிரந்தர தீர்வு வழங்குவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்

வலி மருத்துவத்துறையில், ஒரு முக்கிய மயில்கல்லாக கோவையில் பிரத்தியேக மேம்பட்ட குறைந்த தலையிட்டு சிகிச்சையாக, நாள்பட்ட வலி சிகிச்சை மையமான ரெசிலியோ தி பெயின் கிளினிக் எனும் மருத்துவமனை கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் திறக்கப்பட்டுள்ளது. இதனை ஆக்சான் அனஸ்தீஷியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின்



நிறுவனர் மற்றும் ஹைதராபாத்தில் உள்ள கேர் மருத்துவமனைகளின் கிளினிக்கல் இயக்குனரான டாக்டர் டி வி எஸ் கோபால் ஆகியோர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.விழாவின் ஒருபகுதியாககோவை பார்க் கல்வி நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் அனுஷா ரவி குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். திறப்பு விழாவை தொடர்ந்து வலியற்ற கோவை எனும் விழிப்புணர்வு இயக்கத்தின் தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த இயக்கத்தை தமிழ்நாடு காவல்துறையின் முன்னாள் காவல்துறை கூடுதல் இயக்குனர் பாரி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். நவீன வழி மேலாண்மை முறைகள் குறித்த சிறப்பு கருத்தரங்கை ரெசிலியோ தி பெயின் க்ளினிக் மருத்துவமனையின் நிறுவனரும், வலி மருத்துவ சிகிச்சை நிபுணரான டாக்டர் செந்தில் பிரகாஷ் மோகன் நடத்தினார். இந்த நிகழ்வில் கூடுதலாக, தமிழக கிரிக்கெட் வீரர் ஹரி நிஷாந்த் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விளையாட்டு காயங்கள், மறுவாழ்வு சிகிச்சை, மற்றும் வலியின்றி விரைவாக இயல்பு நிலைக்கு திரும்ப உதவும் மீளுருவாக்க மருத்துவத்தில் வளர்ந்து வரும் பங்கு குறித்து தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். ரெசிலியோ தி பெயின் கிளினிகில், அறுவை சிகிச்சை இன்றி வழங்கப்படும் மேம்பட்ட நவீன வழி சிகிச்சை, முறைகளில் சிறந்து விளங்குகின்றது எனவும், இதில் மீளுருவாக்க சிகிச்சை, ரேடியோ ப்ரிக்வென்சி அப்லேஷன், நரம்பியல் ஒழுங்குமுறை சிகிச்சை, மற்றும் ஓசோன் சிகிச்சை உள்ளிட்ட நவீன சிகிச்சை முறைகள் இங்கு வழங்கப்பட உள்ளது. அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் அங்கீகாரம் பெற்ற டே கேர் சிகிச்சை நடைமுறைகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன, 15 ஆண்டுகளுக்கும் மேலான மருத்துவ அனுபவம் மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிகரமான சிகிச்சைகளை நடைமுறை ஆதரவுடன் இங்கு செயல்படும் இந்த கிளினிக் நாள்பட்ட வலியின் சிகிச்சை மற்றும் மேலாண்மை முறைகளில் ஒரு புதிய மாற்றத்தை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டுள்ளதுஎன்றுடாக்டர்செந்தில் பிரகாஷ் மோகன் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

# சிங்காரப்பேட்டை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மது போதையில் இளைஞர்கள் தகராறு



சிங்காரப்பேட்டை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கரவாகனமான கார்கள் தனியார் பேருந்துகளிடம் மது போதையில் வாக்குவாதத்தில் ஈடுபடுவது வழக்கமாக வைத்துள்ளார்கள் இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது சிங்காரப்பேட்டை காவல்துறை .

கிருஷ்ணகிரி மாவட்டம் சிங்காரப்பேட்டை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மது போதையில் இளைஞர்கள் நான்கு சக்கர வாகனங்கள் அதாவது கார்போன்றவாகனங்களில்மதுபோதையில்தனியார் பேருந்துகளை இடை மறிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்

அதாவதுதங்களுக்குவேண்டியப்பட்டநபர்தனியார் பேருந்தில் பயணம் செய்ய நேரிடும் போது செல்ல வேண்டிய இடத்திற்கு மாறாக இடையில் அந்தப் பையனையே இறக்க வேண்டும் என்பதற்காக காரில் வரும் நபர்கள் தனியார் பேருந்துகளை பயணம் செய்யும் நபர்களின் வேண்டிய பட்டவர்கள் பேருந்துகளை இடை மறைப்பது வழக்கமாக வைத்துள்ளார்கள்ண சுமார் 50 பேருந்துகளை ஏற்றி செல்லும் தனியார் பேருந்துகளை இது போன்ற நபர்கள் இடையில் நின்று வழி மறைப்பது வழக்கமாக வைத்துள்ளார்கள் இதற்கு காவல்துறை என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறது மேலும் இவர்கள் இது போன்ற தொந்தரவு செய்தால் விபத்து ஏதேனும் ஏற்பட்டால் காவல்துறையினர் ஒரு தலைப்பட்சமாக பேருந்துகள் மீது வழக்கு தொடுக்க உள்ளார்கள் இது போன்ற செயல்கள் இதற்கு மேல் ஈடுபட்டால் தனியார் பேருந்து ஓட்டுனர் நடத்துனர் அனைவரும் நீதிமன்றத்தின் நாடி தக்க பரிகாரம் தேட நேரிடும் என்பதை சிங்காரப்பேட்டை காவல் துறையினருக்கு அறிவுறுத்துகிறோம் என்பது தனியார் பேருந்து ஓட்டுநர் நடத்துனர்களின் வேண்டுகோள்.

DHINATH DHALAM Morning Tamil Daily 23.06.2026



ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகளை நேற்று (22.06.2026) கேட்டறிந்தார்.



ஈரோடு பெருந்துறையில் ஈரோடு கோவை ரயில் பயணிகள் (ஜூன்.21) அன்று திருப்பூர் எம்.பி சுப்பராயனிடம் நேரில் மனு அளித்தனர். இதன்படி, ஈரோட்டிலிருந்து திருப்பூர் மற்றும் கோவைக்கு புறப்படும் வண்டி எண் 66607, 66601 ஆகிய இரு பயணிகள் ரயில், 30 நிமிடத்திற்கு பின்பு வரும் விரைவு ரயிலுக்காக தாமதித்து புறப்படுவதால், பணிக்கு செல்வதில் சிரமம் ஏற்படுகிறது. இதனால் தாமதமின்றி இயக்க நடவடிக்கை எடுக்குமாறு மனுவில் தெரிவித்துள்ளனர்



ஈரோடு மாநகராட்சியில் தூய்மைப் பணிகளை தனியார் மயமாக்கும் அரசிடமிருந்து வந்த அறிவிப்பைத் திரும்பப் பெற வலியுறுத்தி, தூய்மைப் பணியாளர்கள் பணியை புறக்கணித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதிகாரிகள் இப்படியொரு முடிவு இல்லை என மறுத்தபோதிலும், மாநகராட்சி ஆணையாளரே நேரடியாகத் தங்களுக்கு எழுத்துப்பூர்வமான உத்தரவாதம் அளிக்க வேண்டும் என தெரிவித்தனர்.

## முதலமைச்சர் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு நல்லூர்-விருத்தாச்சலம் வழித்தடத்தில் இலவச பேருந்து சேவை



தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, விருத்தாச்சலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நல்லூர் வடக்கு ஒன்றியம் சார்பில் பொதுமக்களுக்காக ஒருநாள் கட்டணமில்லா பேருந்து சேவை தொடங்கி வைக்கப்பட்டது. நல்லூர்-விருத்தாச்சலம் மற்றும் விருத்தாச்சலம்-நல்லூர் வழித்தடத்தில் நேற்று ஜூன் 22 திங்கள் கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இயக்கப்படும் ஆனந்தன் பேருந்தின் இலவச சேவையை நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.பி. செல்வமணி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் நல்லூர் ஒன்றிய இணை செயலாளர் ராதாகிருஷ்ணன், கிளை செயலாளர் காமராஜ், மருத்துவர் அணி நிர்வாகி சீனிவாசன், ஒன்றிய செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். விக்கி, தகவல் தொழில்நுட்ப அணி இணை ஒருங்கிணைப்பாளர் ஆனந்த், ஒன்றிய நிர்வாகிகள் முனியமுத்து, முருகன், அருள், விஜய், பாரதி, கிளைநிர்வாகிகள் வசந்த், விமல் உள்ளிட்ட நல்லூர் ஒன்றியம் மற்றும் கிளை நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முதலமைச்சரின் பிறந்தநாளை முன்னிட்டு மக்களின் வசதிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கட்டணமில்லா பேருந்து சேவைக்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சி வார்டு எண் 3, பாலன் நகர் பிரிவில், திருப்பூர் எம்.பி சுப்பராயன், தனது தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.5 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட உயர்கோபுர மின் விளக்கினை இன்று திறந்து வைத்தார். நிகழ்வில் பேரூராட்சி தலைவர் செல்வன், செயல் அலுவலர் பாலசுப்பிரமணியம், அறக்கட்டளை தலைவர் செந்தில் முருகன் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திங்களூர் தனியார் திருமண மஹாலில், தமிழக முதல்வர் விஜய் பிறந்தநாள் விழா (ஜூன்.21) அன்று தவெக சார்பில் கொண்டாடப்பட்டது. நிகழ்வில், ஈரோடு புறநகர் கிழக்குமாவட்டச்செயலாளர்விஜய்வெங்கடேஷ், பெருந்துறைமுன்னாள்எம்எல்ஏஜெயக்குமார்பங்கேற்றுபொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினர். அதனைத் தொடர்ந்து இனிப்புகள் வழங்கப்பட்டது.



ஈரோடு மாவட்டம் சிவகிரியில் உள்ள தனியார் கிளப் சார்பில் மராத்தான் போட்டி (ஜூன்.21) அன்று நடைபெற்றது. 5,7,10 கீ.மீ. என்று ஆண் பெண் இருபாலருக்கும் வயது வாரியாக நடைபெற்ற இப்போட்டியில் ஆர்வமுடன் பங்கேற்று வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஓடினர். குறிப்பிட்ட இடத்துக்குள் இலக்கை அடைந்த வீரர், வீராங்கனைகளுக்கு காவல்துறை அதிகாரிகளுடன் இணைந்து சிவகிரி பேரூராட்சித்தலைவர் பிரதீபா கோபிநாத் பரிசளித்தார்.

## Middle East to remain in crisis as Iran holds Hormuz hostage: HT decodes

*The latest conversation between HT's Shishir Gupta and Aayesha Varma paints a picture of a Middle East locked into a long, uneasy stalemate: low-intensity conflict, weaponised chokepoints, and proxy wars that suit the politics of Tehran, Washington and Jerusalem more than they serve peace.*

*The starting point of the discussion is the first round of US-Tehran talks in Switzerland, held under the shadow of a new memorandum of understanding and an Iranian move to close the Strait of Hormuz for two days. US President Donald Trump's opening bid, as described in the conversation, was maximalist: an "unconditional surrender" by Tehran, coupled with demands that Hezbollah back down. On paper, this looks like diplomacy; in practice, HT Executive Editor Shishir Gupta argues it changes very little on the ground.*



*His assessment is blunt: the region is not any closer to peace, and what lies ahead is prolonged low-intensity conflict. The structural reasons are political. Iran is framed as an Islamic authoritarian state locked in confrontation with two democracies, the US and Israel, each driven by its own electoral timelines. Trump wants to "exit out of this war as soon as yesterday," with a clear Strait of Hormuz and a rolled-back Iranian nuclear programme as his benchmarks. In Israel, Benjamin Netanyahu faces an election on October 27th, 2026, with his political fortunes deeply tied to perceptions of security in Gaza, southern Lebanon and the Golan Heights.*

*Gupta's core argument is that domestic politics in Washington and Jerusalem harden strategic positions that were already difficult to reconcile. Israel today holds security zones in Gaza and in southern Lebanon up to the Litani River, as well as the Golan Heights in Syria. It has "made it very clear" it cannot vacate these zones without exposing its northern and southern frontiers to Hezbollah fire and other threats. If it pulls back, the odds of Netanyahu returning to power diminish sharply, so withdrawal is not an option in the near term.*

*Across the table, Iran cannot accept the "emasculation" of Hezbollah or other clients, because its influence in the Arab world runs through these non-state actors: Hezbollah in Lebanon, the Houthis in Yemen, Kataib Hezbollah, Hamas and a broader constellation of militias stretching from the Levant to the Gulf. Tehran, in Gupta's reading, is comfortable playing for time. The precedent he cites is telling: the Iran-Iraq War dragged on for eight years, with the regime willing to absorb pain and "talk, talk and more talk" while delivering little in terms of concessions. That same slow-burn approach is being applied now.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.